சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண்.26/2023

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரங்கம்மாள் | வயது | 53 |
| க/பெ | துரைசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | தாசனூர் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | கட்டிட வேலை |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

2 ம் வாதி வனிதா எனது மகள் என்றால் சரி தான். பிரதிவாதி எனது மகன் என்றால் சரி தான். எனது கணவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் தோட்ட வேலை செய்து வந்தார். எனது கணவருக்கு இரண்டு சொத்துக்கள் பாத்தியப்பட்டவை என்றும் அதில் ஒன்று அவர் சுயமாக சம்பாதித்தது என்றும் மற்றொன்று அவரது தாயார் எழுதி கொடுத்தது என்றால் ஒரு சொத்து அவரது தாயார் எழுதி கொடுத்தது மற்றொரு சொத்து எனது தாயார் பணம் கொடுத்து அந்த பணத்தில் வாங்கியது. எனது தாயார் பணம் கொடுத்ததை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். அந்த சொத்தை எனது கணவர் சுயமாக சம்பாதித்த சொத்து என்றும் எனது தாயார் பணம் கொடுத்து வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.